RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 196 | ஜூலை.19 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## பகுதிநேர ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்: டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை: ஜூலை.19-

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை : பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை டிபிஐ வளாகத்தில் 10வது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பகுதிநேர ஆசிரியர்கள் காவல் துறையினரால் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓவியம், இசை, உடற்கல்வி, கணினி என பல்வேறு பாடங்களைப் பயிற்றுவிக்க நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்களை பணிநிரந்தரம் செய்யுமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் செவி சாய்க்காத திமுக அரசால், சுமார் 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

பகுதிநேர ஆசிரியர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள் என, திமுக தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது, இதை இது வரை நிறைவேற்றாததால் போராடும் ஆசிரியர்கள் மீது வழக்குப்பதிவு செய்து மிரட்டுவதும் கண்டனத்துக்குரியது.

ஒவ்வொரு போராட்டத்தின் போதும் அழைத்துப் பேசி கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும் என பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகளின் மூலம் வாக்குறுதி அளித்த திமுக அரசு, ஆட்சி நிறைவடையும் தருவாயிலும் அவர்களை பணிநிரந்தரம் செய்ய மறுப்பது ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்கும் இழைக்கும் நம்பிக்கை துரோகம் ஆகும்.

எனவே, காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட பகுதிநேர ஆசிரியர்களை எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிக்க வேண்டும். அவர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.



■ மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் டி.ஆண்டிபட்டி ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்"சிறப்பு திட்ட முகாமை சோழவந்தான் சட்ட மன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்தார்.வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணவேணி,இலட்சுமி காந்தம்,தாசில்தார்கள் இராமச்சந்திரன்,பார்த்திபன், ஊராட்சி செயலாளர் தனலெட்சுமி ஆகியோர் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.நிகழ்வில் அனைத்து துறை அரசு அதிகாரிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், மேற்கு ஊராட்சி ஒன்றியம் பேச்சிகுளம் ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்"சிறப்பு திட்ட முகாமில் ஊராட்சி உதவி இயக்குநர் அரவிந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பேராட்சி பிரேமா,பொற்செல்வி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ரம்யா, பேச்சிகுளம் ஊராட்சி செயலாளர் சக்தி மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர். உடன்முன்னாள் மேற்கு ஊராட்சி ஒன்றிய சேர்மன் வீரராகவன் ஊராட்சி செயலாளர்கள் மனோஜ்,கணேசன்,விவேக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## “பிஹாரில் 20 லட்சம் பெண்கள் இப்போது லட்சாதிபதிகள்” பிரதமர் மோடி பெருமிதம்



மோட்டிஹாரி: ஜூலை.19-

நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள மாநிலங்கள் வளர்ச்சி பெறுவதற்கு பிஹார் வளர்ந்த மாநிலமாக இருக்க வேண்டியது மிகவும் முக்கியம் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மேலும், “20 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பிஹாரில் லட்சாதிபதிகளாக முன்னேறி இருக்கிறார்கள். இது மத்திய அரசின் நடவடிக்கைக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி” என்று பெருமிதமாக கூறியுள்ளார்.

பிஹாரின் மோடிஹரி நகரில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று ரூ.7,200 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "கடந்த காலத்தில் மேற்கத்திய நாடுகள் வளர்ச்சி கண்டதைப் போல தற்போது கிழக்கு நாடுகள் வளர்ந்து வருகின்றன. நாட்டின் கிழக்குப் பகுதி வளர்ச்சி பெறுவதற்கு, பிஹார் வளர்ந்த மாநிலமாக இருக்க வேண்டும். மோட்டிஹரியை நாம் மும்பையைப் போல உருவாக்க வேண்டும்.

முந்தைய காங்கிரஸ் ஆர்ஜேடி கூட்டணி அரசைப் போல அல்ல நாங்கள். பிஹாரின் வளர்ச்சிக்காக எங்கள் அரசாங்கம் அதிக நிதியை வழங்கி உள்ளது. இன்று, ஏழைகளுக்கான நலத்திட்டங்கள் அவர்களை நேரடியாகச் செல்கின்றன. பிஹாரின் மக்கள் தொகை நார்வே, சிங்கப்பூரைவிட அதிகம். இங்குள்ள ஏழை மக்களுக்கு நாங்கள் சிறந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளோம். 20 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பிஹாரில் லட்சாதிபதிகளாக முன்னேறி இருக்கிறார்கள். பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் மத்திய அரசின் நடவடிக்கைக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி இது.

பிஹார் வளமாக இருந்தால், நாடு வளமாக இருக்கும். பிஹார் இளைஞர்கள் வளமாக இருந்தால், பிஹார் வளமாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டே மத்திய அரசுக்கு ஆதரவாக நிதிஷ் குமார் அரசு செயல்படுகிறது. இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறது.

எங்கள் தீர்மானம் என்னவென்றால், வரும் காலத்தில் மேற்கே மும்பை இருப்பதைப் போல் கிழக்கே மோட்டிஹாரி திகழ வேண்டும். குருகிராமில் வாய்ப்புகள் இருப்பதைப் போலவே, கயாவிலும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். புனேவைப் போலவே, பாட்னாவில் தொழில்துறை வளர்ச்சி இருக்க வேண்டும். சூரத்தைப் போல, சந்தால் பர்கானா உருவாக வேண்டும். ஜெய்ப்பூரைப் போலவே, ஜல்பைகுரி மற்றும் ஜஜ்பூரில் சுற்றுலா மேம்பட வேண்டும். பெங்களூரைப் போலவே, விர்பம் மக்களும் முன்னேற வேண்டும்.

இன்று பிஹாரில் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனெனில் மத்தியிலும், மாநிலத்திலும் பிஹாருக்கான அரசாங்கம் உள்ளது. காங்கிரஸ் ஆர்.ஜே.டி கூட்டணி ஆட்சிக் காலத்தில், அதாவது 2004 2014 வரை மத்திய அரசிடம் இருந்து பிஹாருக்கு சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே கிடைத்தது. காரணம், அவர்கள் இங்குள்ள நிதிஷ் குமார் அரசாங்கத்தை வழிவாங்கிக் கொண்டிருந்தார்கள்.

2014ல், மத்தியில் பணியாற்றும் வாய்ப்பை நீங்கள் எனக்கு வழங்கினீர்கள். நான் வந்த பிறகு பழிவாங்கும் அரசியலுக்கு முடிவு கட்டினேன். கடந்த 10 ஆண்டுகளில், மத்திய அரசு பிஹாரின் வளர்ச்சிக்காக கடந்த யுபிஏ ஆட்சியில் வழங்கப்பட்டதைவிட பல மடங்கு அதிக நிதியை வழங்கி உள்ளது" என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், ஆளுநர் ஆரிப் முகம்மது கான், முதல்வர் நிதிஷ் குமார், துணை முதல்வர் சாம்ரத் சவுத்ரி, மத்திய, மாநில அமைச்சர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அவசர காலங்களில் பொதுமக்களை மீட்பது தொடர்பாக போலீஸார் மேற்கொண்ட பிரம்மாண்ட பேரிடர் ஒத்திகை



சென்னை: ஜூலை.19-

பேரிடர் மற்றும் அவசர காலங்களில் பொதுமக்களை மீட்பது தொடர்பாக சென்னை போலீஸார் நேற்று பிரம்மாண்ட ஒத்திகை நடத்தினர். அவசர காலங்களில் மக்களை காப்பதற்கும், உயிர்களை மீட்பதற்காகவும் சென்னை காவல் துறையில் பேரிடர் மீட்புக் குழு உருவாக்கப்பட்டது. 290 போலீஸார் கொண்ட இந்த 16 பேரிடர் மீட்புக் குழுவினர் ஆங்காங்கே தனித்தனி குழுவாகப் பிரிந்து சென்று பேரிடர் காலங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபடுவார்கள்.

அதன் முன்னேற்பாடாக காவல்துறை மீட்புக் குழுவினர் மீட்புப் பணி செயலாக்கம், அவசர தேவைகளில் உயிர் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணி தொடர்பாக நேற்று எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் பிரம்மாண்ட ஒத்திகை நிகழ்ச்சியை நடத்தினர். பயிற்சி பெற்ற 290 போலீஸார் அடங்கிய 16 சிறப்பு மீட்புக் குழுக்களும் இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவாகச் சென்று மீட்புப் பணிகளை மேற்கொள்வது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி முதலுதவி அளித்தல், வேரோடு சாய்ந்த மரங்கள் அல்லது பிற அம்சங்களால் தடைபட்ட சாலைகளை சீர்படுத்துதல் மற்றும் மேம்பட்ட கயிறு நுட்பங்களைப் பயன்படுத்தி உயரமான கட்டிடங்களில் சிக்கித் தவிக்கும் நபர்களை மீட்டல் போன்ற ஒத்திகையில் ஈடுபட்டனர்.

தாழ்வான மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளிலிருந்து மக்களை ரப்பர் படகுகளைப் பயன்படுத்தி வெளியேற்றுதல், வலுவான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நெறிமுறைகளை நிறுவுதல் மற்றும் எந்த வொரு அவசர நிலைகளின்போதும் ஒருங்கிணைந்த மற்றும் தடையற்ற பதிலை உறுதி செய்வதற்கான தகவல் தொடர்பு திட்டங்களை ஒத்திகை பார்த்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

இந்த ஒத்திகையை சென்னை தலைமையிடத்து கூடுதல் காவல் ஆணையர் விஜயேந்திர பிதாரி நேரில் பார்வையிட்டு குழுக்களின் ஒட்டுமொத்த தயார் நிலை மற்றும் செயல்பாட்டுத் திறனை ஆய்வு செய்தார். எந்தவொரு இயற்கை பேரிடர் சூழ்நிலையிலும் காவல் துறை சரியான நேரத்தில் உதவி வழங்கவும் பொதுமக்களை பாதுகாக்கவும் நன்கு தயாராக இருப்பதை உறுதி செய்வதே இந்தத் தயார் நிலை முயற்சியின் நோக்கம் என போலீஸ் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## சிவகங்கை மாவட்டத்தில் வானவில் மன்ற நான்காமாண்டு தொடக்கவிழா







சிவகங்கை ஜூலை. 19

சிவகங்கை மாவட்டம்தமிழ்நாட்டில் உள்ள அரசு நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் மாணாக்கர்கள் அறிவியல் கணிதப் பாடங்களை தானாக பரிசோதனைகளை செய்து கற்றலை மேம்படுத்துவதற்காக வானவில் மன்றம் செயல்படுத்தப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டத்தில் 385 அரசு மேல்நிலை உயர்நிலை நடுநிலைப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாவட்டத்தில் 17 வானவில் மன்றக் கருத்தாளர்களைக் கொண்டு கணித அறிவியல் செயல்பாடுகள் ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மாதமும் கலந்தாய்வு கூட்டங்களும் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. 2025 2026 ஆம் ஆண்டிற்கான

வானவில் மன்றக் கருத்தாளர்களுக்கு சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தினுள் அமைந்துள்ள மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி கூட்டரங்கில் நான்காமாண்டு தொடக்கவிழா மற்றும் ஜூலை மாதத்திற்கான பயிற்சி நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மாரிமுத்து கூட்டத்தைத் துவக்கி வைத்து கருத்தாளர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்கி கையடக்க கணினியை வழங்கினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் முதன்மைக் கருத்தாளர் ஆரோக்கியசாமி வரவேற்று பயிற்சி அளித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ கருத்தாளர்களின் பணிகளை வெகுவாக பாராட்டியும் வருங் கல்வியாண்டில் மாணவர்களை அறிவியலிலும் கணிதத்திலும் சிறந்து விளங்கக்கூடியவர்களாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஜூலை மாதத்திற்கான அறிவியல் மற்றும் கணித ஆய்வுகளை வானவில் மன்ற கருத்தாளர்கள் சித்ரா ஏங்கள்ஸ் தனலட்சுமி செந்தாமரை செல்வி செய்து காண்பித்தனர்.

வானவில் மன்ற கருத்தாளர்கள் இராஜயோகம் ஜோதி சித்ரா ஆகியோர் 3 வருட தங்களின் அனுபவ பகிர்வை பகிர்ந்து கொண்டார்கள். கருத்தாளர் பாண்டிச்செல்வி நன்றி கூறினார்.





# சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

சோழிங்கநல்லூர், ஜூலை.19-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 15 மண்டலம் தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் வழிகாட்டுதலில், 192 வது வார்டு ஜூலை (17) நீலாங்கரை சுகன்யா திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 15வது மண்டல குழு தலைவர் வி .இ.மதியழகன் தலைமையில் நடைபெற்றது. முகாமில் மக்களை தேடி மருத்துவ, காவல் துறையின் காவலர்கள் முதல் தகவல் அறிக்கை அலட்சியமாக பதில் போன்ற எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் மண்டல குழு தலைவர் வி .இ.மதியழகன் பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்து மனுக்களாக பெற்று விரைவில் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர். பொதுமக்கள் ஆர்வத்துடன் முகாமில் மனுக்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கூறி சென்றது குறிப்பிடத்தக்கது.



# ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கைக்கான புழுதிவாக்கம் வார்டு 186 கலந்துரையாடல் கூட்டம்

புழுதிவாக்கம், ஜூலை.19-

தமிழக முதல்வர், மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா.சுப்பி ரமணியன் வழிகாட்டு தலில், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கைக்கான புழுதிவாக்கம் 186 வது வார்டில் மாமன்ற உறுப்பினர், வரிவிதிப்பு (ம) நிதிக்குழு உறுப்பினர், வட்ட கழகச் செயலாளருமான, ஜே .கே. மணிகண்டன் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. வட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி உள்ளிட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , BLA2 மற்றும் BLDA, மற்றும் கழக செயல்வீரர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஜே.கே.மணிகண்டன் அவர்கள் மிக விரைவில் 40% இலக்கை நோக்கி உறுப்பினர் சேர்க்கையை விரைவு படுத்தவேண்டும் என கலந்துரையாடல் கூட்டத்தில் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



■ மதுரை பந்தல்குடி கால்வாயை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார்ஆய்வு செய்து பார்வையிட்டார்.



■ மதுரை மாவட்டம் சின்ன சொக்கிகுளத்தில் மதுரை மேற்கு மற்றும் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டார்.

# தோவாளை வட்டத்துக்குட்பட்ட உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஜூலை.19-

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத்தொடர்ந்து, தோவாளை வட்டம் அழகியபாண்டியபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு எட்டாமடை ஆர்.சி.மண்டபத்தில் நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தமிழ்நாடு உணவு ஆணையத்தின் தலைவர் திரு.சுரேஷ் ராஜன் அவர்கள் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி நேரில் பார்வையிட்டு, தெரிவிக்கையில்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொதுமக்களின் வசதிக்கு கேற்ப அவர்களின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும், தேவைகளையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவ தற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் வழிவகை செய்கிறது.

அதனடிப்படையில் 15.07.2025 முதல் 17.07.2025 வரை நடைபெற்ற முகாமில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 86 மனுக்களும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 141 மனுக்களும், கால்நடை பாராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீன்வள நலத்துறை சார்பில் 94 மனுக்களும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை சார்பில் 91 மனுக்களும், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் 1136 மனுக்களும், எரிசக்தித்துறை சார்பில் 285 மனுக்களும், நிதித்துறை சார்பில் 1 மனுக்களும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 829 மனுக்களும், உயர்கல்வித்துறை சார்பில் 4 மனுக்களும், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் 7 மனுக்களும், மதுவிலக்கு மற்றும் கலால் துறை சார்பில் 5 மனுக்களும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையின் சார்பில் 138 மனுக்களும், தொழில் துறை சார்பில் 1, தகவல் தொழில்நுட்பத்துறை சார்பில் 2 மனுக்களும், தொழிலாளர் நலன் துறை சார்பில் 479 மனுக்களும், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் 69 மனுக்களும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 383 மனுக்களும், மத்திய அரசு குறித்த 14 மனுக்களும், தேர்தல் துறையின் சார்பில் 7 மனுக்களும், பொதுப்பணித்துறை சார்பில் 3 மனுக்களும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 2459, ஊரக வளர்ச்சி துறை சார்பில் 281 மனுக்களும், பள்ளிகல்வி துறை சார்பில் 6 மனுக்களும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 47 மனுக்களும், போக்குவரத்து துறை சார்பில் 16 மனுக்களும், நீர்வளத்துறை சார்பில் 11 மனுக்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 117 மனுக் களும் என மொத்தம் 6712 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட மனுக்களில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமின் கீழ் 4372 மனுக்கள் ஆகும்.

பெறப்பட்ட மனுக்களில் 15.07.2025 அன்று 70 மனுக்களுக்கும், 16.07.2025 அன்று 130 மனுக்களுக்கும், 17.07.2025 அன்று 115 மனுக்கள் என மொத்தம் 315 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு, அதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மீதமுள்ள கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று தோவாளை வட்டம் அழகியபாண்டியபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு எட்டாமடை ஆர்.சி.மண்டபத்தில் நடைபெற்ற முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, முகாம்களில் பெறப்படும் அனைத்து விண்ணபங்களிலும் உரிய ஆவணங்கள் இணைத்து இருப்பதை வாங்கப்படுகிறதா, சரியான முறையில் பதிவேற்றம் செய்யப்படுகிறதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் தங்களை நாடி வந்து கேட்கும் போது தகுந்த பதில்களை அவர்களுக்கு வழங்குவதோடு, அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# காட்பாடி தாலுகா கோடவாரிபள்ளி அங்கன்வாடியில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



■ வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கோடவாரிப்பள்ளி அங்கன்வாடி மையத்தை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன் உடனிருந்தார்.



■ தேனி மாவட்டம் போடி சுப்புராஜ் நகரில் போடிநாயக்கனூர் நகர்நல சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் T.B.S.S.C.S. வடமலை ராஜைய பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்த செயற்குழு கூட்டத்தில் செயலாளர். பாண்டியன் முக்கிய ஆலோசகர்கள் சுந்தர்ராஜன், ரவிசந்திரன் ,ஓய்வு பெற்ற சார்புஆய்வாளர் ராமகிருஷ்ணன்.மற்றும் போடி நகர் பகுதியை சேர்ந்த சமுதாய முக்கிய தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.இந்த செயற்குழு கூட்டத்தில் வருகின்ற ஆகஸ்ட் 20ஆம் தேதி பொதுக்குழு கூட்டம் நடத்துவது குறித்து பல்வேறு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.இந்த செயற்குழு கூட்டத்தில் சாலை காளியம்மன் கோவில் அருகே சன்னாசிபுரம் செட் பகுதி மக்களுக்காக பேருந்து நிறுத்தம் ஏற்படுத்துவது, போடி அரசு பொது மருத்துவமனைக்கு பிரேத குளிர்சாதனபெட்டி வழங்குவது, போடி நகர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைப்பது உள்ளிட்ட 15 தீர்மானங்கள் இந்த செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஜூலை.19-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கம் வேளாண்மைத்துறையின் மூலம் தெரிவிக்கப்ப ட்டுள்ளன.





தொடர்ந்து இராமநாதபுரம், கடலாடி, கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி ஆர்.எஸ்.மங்கலம் திருவாடானை, போகலூர், நயினார் கோவில், மண்டபம் மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதிகளில் உள்ள கோரிக்கைகளை வட்டார வாரியாக எடுத்துரைத்தனர். இந்த கோரிக்கைகளுக்கு தொடர்புடைய அலுவலர்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

அதனைத்தொடர்ந்து விவசாயிகள் முன்வைத்த கோரிக்கையான நீர்நிலைகள் தூர்வார நடவடிக்கை வேண்டுதல், மழை மானிகள் போதிய அளவு அமைந்திட வேண்டுதல், மான் மற்றும் காட்டுப் பன்றிகள் மூலம் ஏற்படுத்தும் பயிர் சேதங்களை தடுத்தல், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தனியார் உரக்கடைகளில் சரியான விலைக்கு வழங்குவதை வேளாண்மைத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டுதல். மத்திய கூட்டுறவு வங்கி மூலம் கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகளுக்கு தேவையான தொழில் கடன்கள் மற்றும் பயிர் கடன் வழங்க வேண்டுதல் மற்றும் நெல், பருத்தி, கடலை போன்ற பயிர்களுக்கு கடந்த ஆண்டு இழப்பீடு பெறாத விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் பெற்றுத்தர வேண்டுதல் குறித்த கோரிக்கைகளுக்கு துறை அலுவலர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். மேலும் வேளாண்மை உழவர் நலத்துறை மூலம் மாதந்தோறும் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய தீர்வுகள் காணப்பட்டு வருகின்றது. மேலும் விவசாயிகள் வழங்கும் மனுக்கள் மீது தனி கவனம் செலுத்திடவும், அவர்களுக்கு உரிய பலன்கள் உரிய நேரத்தில் கிடைத்திடவும் அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் விவசாயிகள் வேளாண் சார்ந்த சந்தேகங்களை அருகில் உள்ள வேளாண் அலுவலகங்களுக்கு நேரில் சென்று கேட்டறிந்து பயன் பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட வேளாண் பொறியியல் துறையின் மூலம் மானியத்திட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருவது குறித்த கண்காட்சி அரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டதுடன் விவசாயிகளிடம் மானியத்திட்டம் குறித்;து எடுத்துரைத்து பயன்பெற வைக்க வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (பொ) திரு.பாஸ்கரமணியன் அவர்கள், கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ஜூனு அவர்கள், மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர்ஃ மேலாண்மை இயக்குநர் திருமதி.ராஜலெட்சுமி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் குன்றக்குடி ஊராட்சி பகுதியில் நடைபெற்ற " உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்







கல்லல் ஜூலை.19

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியம், குன்றக்குடி ஊராட்சி பகுதியிலுள்ள வெள்ளாளர் சமுதாயக்கூடத்தில் நேற்று (18.7.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை, மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தலைமையில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில் பொதுமக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலும் நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த புதிய திட்டமான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டமானது, கடந்த 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, செப்டம்பர் 2025 வரை தமிழகம் முழுவதும் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 215 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, கடந்த ஜூலை 15 முதல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இத்திட்ட முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இம்முகாம்கள் தொடர்பான முறையான அறிவிப்புக்கள் மற்றும் விளம்பரங்கள், பத்திரிக்கை செய்திகள் ஆகியவைகளின் வாயிலாக பொதுமக்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கப்பட்டு, பொதுமக்களும் அந்தந்த பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் வெகுவாக கலந்து கொண்டு வருகின்றனர்.

"உங்களுடன் ஸ்டாலின் " திட்டத்தின் கீழ் பொதுமக்களின் தேவைகளை நிவர்த்தி செய்திடும் பொருட்டு, மக்களைத் தேடி அரசு என்ற உன்னத நிலையை தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்திய துணை கண்டத்தில் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது.

குறிப்பாக, மகளிர்களுக்கான கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கு ஏதுவாக, தளர்த்தப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்களும் இம்முகாமின் வாயிலாக பெறப்பட்டு வருகிறது.

கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் குன்றக்குடி ஊராட்சியிலுள்ள வெள்ளாளர் சமுதாயகூடத்தில் இத்திட்ட முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதேபோன்று, நேற்றைய தினம் காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1,2,3 ஆகிய பகுதிகளுக்கென கழனிவாசல் முத்துகிருஷ்ணா மஹாலிலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென இடைக்காட்டூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென சோழபுரம் ஊராட்சியிலுள்ள மீனா திருமண மண்டபத்திலும்,

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென சிறுமருதூர் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென எஸ்.புதூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக் கூடத்திலும், "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இம்முகாம்களில் பொதுமக்கள் அளிக்கப்படும் விண்ணப்பங்களில் தகுதியான விண்ணப்பங்கள் மீது காலதாமதமின்றி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் பயன்களும் உடனடியாக வழங்கப்படும். பொதுமக்கள் திட்டங்களின் பயன்களை பெறுவதற்கு அதற்கான தகுதிகளின் அடிப்படையினை முதலில் அறிந்து கொண்டு, விண்ணப்பித்தல் வேண்டும். இம்முகாம்களின் வாயிலாக பெறப்படும் மனுக்களில் பரிசீலனைக்குட்படுத்தப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் .

எனவே, பொதுமக்கள் இதனை கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும் முகாம்களில், தங்களது கோரிக்கைகள் தொடர்பாக உரிய ஆவணங்களுடன் மனுக்களை அளித்து, தங்களது கோரிக்கைகளை நிவர்த்தி செய்து, அரசின் திட்டப்பயன்களை பெற்று பயன்பெற வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இம்முகாமினை முன்னிட்டு, முன்னதாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டு, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்க திட்டத்தின் கீழ் பழத்தொகுப்புகள், காய்கறி விதை தொகுப்புகள் மற்றும் வேளாண்மைத்துறையின் சார்பில் குறுவை சாகுபடி திட்டத்தின் கீழ் திரவ உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட சத்து உரம் ஆகியவைகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆணையர் (கலால்) ரெங்கநாதன், திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# காமராஜரை பற்றி அவதூறாக பேசிய திருச்சி சிவா மன்னிப்பு கேட்காவிட்டால் சென்னையில் அவர் வீட்டை முற்றுகையிடுவோம்

## நாடார் சங்க கூட்டமைப்பு எச்சரிக்கை

தாம்பரம், ஜூலை.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் காமராஜர் குறித்து அவதூறாக பேசியதாக திமுக எம்.பி திருச்சி சிவாவை கண்டித்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நாடார் அமைப்புகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது அந்த வகையில் கிழக்கு தாம்பரம் பூண்டி பஜார் காமராஜர் சிலை அருகே நாடார் சங்க கூட்டமைப்பு தலைவர் மின்னல் ஸ்டீபன் நாடார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாடார் பாதுகாப்பு பேரவை தலைவர் சீனிவாசன் நாடார் அகில இந்திய நாடார் மகாஜன சபை தலைவர் கார்த்திகேய நாடார் தாம்பரம் தொகுதி நாடார் சங்கங்களில் கூட்டமைப்பு தலைவர் ஞானப்பால் நாடார் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டு திருச்சி சிவாவை கண்டித்து அவர் மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும் அவரை தமிழக அரசு கைது செய்ய வலியுறுத்தியும் கண்டன கோசங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் சேலையூர் நாடார் சங்க நிர்வாகி காந்தி சேகர். தேசிய நாடார் சங்க பொதுச் செயலாளர் விஜயகுமார், நாடார் சங்க கூட்டமைப்பு பொதுச்செயலாளர் தர்மலிங்கம் முடிச்சூர் வட்டார நாடார் சங்க நிர்வாகிகள் விஜயகுமார் செல்வமணி கூடுவாஞ் சேரி நாடார்கள் நண்பர்கள் சங்க நிர்வாகிகள் ஜவகர் பொண்ணுகாலை. அகில இந்திய நாடார் மகாஜன சபை அமைப்பு செயலாளர் ஏ பி துரை நாடார் மற்றும் மாடம்பாக்கம் வட்டார நாடா ஐக்கிய சங்கம் அகரம் நாடார்கள் ஐக்கிய சங்கம் சித்தாலப்பாக்கம் நாடார் சங்கம் மேடவாக்கம் நாடார் சங்கம் சத்யா நகர் நாடார் சங்கம் சிட்லபாக்கம் நாடார் சங்கம் முடிச்சூர் நாடார் சங்கம் பெருங்களத்தூர் நாடார் சங்கம் புத்தேரி நாடார் சங்கம் மற்றும் கூடுவாஞ் சேரி குரோம்பேட்டை பல்லாவரம் கீழ்கட்டளை நாடார் சங்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த நாடார் சங்க கூட்டமைப்பு தலைவர் மின்னல் ஸ்டீபன் நாடார் கூறுகையில் தொடர்ந்து திமுக எம்பிக்கள் ஆர் எஸ் பாரதி ஆ.ராசா ஆகியோ காமராஜரை அவதூறாக பேசி வந்த நிலையில் தற்போது திருச்சி சிவா அனைத்து சமுதாய மக்களும் போற்றும் பெருந்தலைவர் காமராஜர் குறித்து அவதூறு கருத்துகளை பேசி உள்ளார் இதற்கு அவர் உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும் முதலமைச்சர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் மன்னிப்பு கேட்கவில்லை என்றால் திருச்சி சிவா இல்லத்தை அனைத்து நாடார் சங்கங்கள் சார்பில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் என தெரிவித்தார்.





■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாணமை மற்றும் உழவர் நலத்துறையின் "வேளாண்மை ஊட்டச்சத்து இயக்கம்" திட்டத்தின் கீழ் வீட்டிலேயே உற்பத்தி செய்து அன்றாட உணவில் எடுத்துக்கொள்ள ஏதுவாக ஊட்டச்த்துகள் நிறைந்த 3 வகையான பழச்செடிகள் மற்றும் காய்கறி விதைகள், பயறு வகை விதை தொகுப்புகள் மற்றும் அதற்கான கையேட்டினை விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவின்குமார் வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அன்பழகன் அவர்கள் உடன் உள்ளார்

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தென்காசி, ஜூலை.19-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ மற்றும் டால்மியா பாரத் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வீட்டு சுகாதார உதவியாளர் (Home Health Aide) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களாவும் 18 முதல் 35 வயதுவரை இருக்க வேண்டும். பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு, முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்புடன் ஆரம்பகால மாத ஊதியமாக ரூ.15,000/ முதல் ரூ.17,000/ வரை கிடைக்க வழிவகை செய்யப்படும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

இப்பயிற்சி பெற தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற முகவரில் விண்ணப்பிக்கலாம் இப்பயிற்சிக்கான கால அளவு இரண்டு மாதம். மேலும் சென்னை உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி உணவுக்கான செலவினம் நிறுவனம் மூலமாக வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## போடிநாயக்கனூரில் தென் திருவண்ணாமலை என்று அழைக்கப்படும்

# போடி பரமசிவன் கோயில் அருகே உள்ள அருள்மிகு பாலமுருகன் திருக்கோவிலுக்கு செல்ல பாதை இல்லாததால் பக்தர்கள் அவதி

தேனி, ஜூலை.19-

தேனி மாவட்டம் போடி பரமசிவன் கோவிலில் பின்புறம் உள்ள பாலசுப் பிரமணிய கோவிலுக்கு பரமசிவன் கோயிலில் கிரிவலப் பாதையில் நேரடியாக சாமி தரிசனம் செய்து வந்த பக்தர்கள் கடந்த சில மாதங்களாக இப்பதையை மறைத்து பக்தர்கள் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது இந்த நாள் கிரிவலப் பாதை வழியாக முருகனை தரிசிக்க செல்லும் பக்தர்கள் நீண்ட நெடிய தூரத்திற்கு சென்று அப்பால் முருகனை தரிசித்து வருகின்றனர். தற்பொழுது அடைக்கப்பட்ட பாதையை திறக்க அறநிலையத்துறை மற்றும் கோயில் கமிட்டி நிர்வாகம் முன் வர வேண்டுமென முருக பக்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# உலக மக்கள் தொகை தினம் 2025ஐ (ஜூலை 11) முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில், உறுதிமொழி ஏற்பு மற்றும் விழிப்புணர்வு ரதம், விழிப்புணர்வு பேரணி , விழிப்புணர்வு கருத்தரங்கம் நிகழ்ச்சி

சிவகங்கை, ஜூலை.19-

உலக மக்கள் தொகை தினம் 2025ஐ (ஜூலை 11) முன்னிட்டு, மருத்துவம் மக்கள் நல் வாழ்வுத்துறை, மாவட்ட குடும்பநலச் செயலகம் ஆகியவைகளின் சார்பில், சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில் உறுதிமொழி ஏற்பு மற்றும் விழிப்புணர்வு ரதம், விழிப்புணர்வு பேரணி, விழிப்புணர்வு கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், உலக மக்கள் தொகை 1987 ஜூலை 11ல் 500 கோடியை தாண்டியதை தொடர்ந்து, மக்கள் தொகை பெருக்கம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக ஐ.நா. சபையால் அறிவிக்கப்பட்டு அனுசரிக்கப்படுகிறது.







1947ல் இந்திய மக்கள் தொகை 35 கோடியாகவும், 2001ஆம் ஆண்டு 102 கோடியாகவும், 2011ஆம் ஆண்டு 121 கோடியாகவும், 2021 ஆம் ஆண்டு உத்தேசமாக 138 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் 2011ன் படி உத்தேசமாக மக்கள் தொகை 7,21,47,030 ஆக உள்ளது. மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் தேவைகள், பற்றாக்கு றைகள் மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட தமிழக அரசால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இதன் நோக்கமாக, இளம் வயது திருமணத்தை ஒழித்தல், இளம் வயது கர்பத்தினை தவிர்த்தல், தேவையற்ற கர்பங்களை தடுத்தல், ஆரோக்கியமான பிறப்பு இடைவெளியினை உருவாக்குதல், சிறு குடும்ப நெறியினை பாதுகாத்தல், குடும்ப நலத்தில் ஆண்களின் பங்கினை ஊக்குவித்தல், பெண் கல்வியினை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல் உள்ளிட் டவைகள் தொடர்பாக பொதுமக் களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

"உடலும் மனமும் பக்குவமடைந்து உறுதியாகும் வயது 21 அதுவே பெண்ணுக்கு திருமணத்திற்கும் தாய்மையடைவதற்கும் உகந்த வயது" என்பது இந்த ஆண்டின் உலக மக்கள் தொகை தினத்தின் முழக்கமாகவும், "ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப்பேறு திட்டமிட்ட பெற்றோருக்கான அடையாளம்" என்பது இவ்வாண்டின் உலக மக்கள் தொகை தினத்தின் கருப்பொருளாகவும் உள்ளது. அரசின் குடும்ப நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, விழிப்புணர்வு ரதமானது இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வு ரதமானது மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் சென்று பொதுமக் களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்திட உள்ளது. இதனை பொது மக்கள் அறிந்து கொண்டு, கடைபிடித்து, அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இன்றையதினம் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் கல்லூரி மாணவியர்கள், பயிற்சிப்பள்ளி செவிலியர்கள், துணை செவிலியர்கள், களப்பணி யாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். பொது மக்களை எளிதில் ஈர்த்திடும் வண்ணம் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளுடன் இப்பேரணியானது சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் தொடங்கி, திருப்பத்தூர் சாலை, பழைய நீதிமன்ற வாசல் மற்றும் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று, தாய் சேய் நல மருத்துவமனை அருகில் நிறைவடைந்தது.

மேலும், இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உலக மக்கள் தொகை தின உறுதிமொழி ஏற்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை மருத்துவமனை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சத்யபாமா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.மீனாட்சி, துணை இயக்குநர் (குடும்ப நலம்) மரு.வி.அருள்தாஸ், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு.கவிதாராணி, மக்கள் கல்வி மற்றும் தகவல் அலுவலர் (குடும்பநலச் செயலகம்) முனைவர். செந்தில்குமார், முதல்வர் அரசு மகளிர் கலைக்கல்லூரி முனைவர் நாளதம் மற்றும் மாவட்ட குடும்ப நல அலுவலர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், கல்லூரி மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

சோழிங்கநல்லூர், ஜூலை.19-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 14 மண்டலம் தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் வழிகாட்டுதலில், பகுதி 41, 184வது வார்டு ஜூலை (17) உங்களுடன் ஸ்டாலின் முகாம் 14வது மண்டல குழு தலைவர், எஸ்.வி.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. முகாமில் நகர்ப்புறம் 13 துறைகள், 43 சேவைகள், மக்களை தேடி மருத்துவம், காவல் துறையின் காவலர்கள் முதல் தகவல் அறிக்கை அலட்சியமாக பதில் , ஆபாசமாக பேசுவது, ஒருமையில் பேசுவது போன்ற எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் மண்டல குழு தலைவர், எஸ் .வி ரவிச்சந்திரன் பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்து மனுக்களாக பெற்று விரைவில் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர். முகாமில் சில துறைகளில் உடனடியாக அப்போதே தீர்வு காணப்பட்டதை கண்ட பொதுமக்கள் ஆர்வத்துடன் முகாமில் மனுக்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கூறி சென்றது குறிப்பிடத்தக்கது.




## வேலூரில், தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு சார்பில் மறியல் போராட்டம்

### 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கைது

வேலூர், ஜூலை.19-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், வேலூர் மாவட்ட தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு சார்பில்

பழைய ஒய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டி மறியல் ஆர்ப்பாட்டம், இடைநிலை ஆசிரியர்களுக்கு, மத்திய அரசு ஆசிரியர் களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். அரசாணை 243ஐ ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பத்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் தொடர் மறியல் போராட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக வேலூர் மாவட்ட கூட்டு நடவடிக்கைக்குழு சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

மறியல் போராட்டத்திற்கு ஏ.ஜோசப் அன்னையா, குப்புராமன், டி.சரஸ்வதி, என்.சகேயு சத்தியகுமார் தலைமை தாங்கினர்.

கு.கீதா, எம்.பி.சுரேஷ் குமார், சு.தனபால், அல்போன்ஸ்கிரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சுமார் 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மறியலில் ஈடுபட்டனர். சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை காவல்துறையினர் கைது செய்து, தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து



## குடியாத்தம் பிச்சனூர் காளியம்மன் திருக்கோயிலில் தேர் திருவிழா

வேலூர், ஜூலை.19-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, பிச்சனூர் அருள்மிகு காளியம்மன் திருக்கோவில் 26 ஆம் ஆண்டு தேர்த் திருவிழா முன்னிட்டு நகர புதிய நீதிக் கட்சியின் சார்பாக பக்த கோடிகளுக்கு காலையில் இட்லி இடியாப்பம் கறி குழம்பு, மதியம் சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது, இந்நிகழ்ச்சி நகர செயலாளரும், கைத்தறி காவலன், சமூக ஆர்வலருமான எஸ். ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக அக்டோபர் 24 மருது இளைஞர் இயக்கத்தின் நிறுவனத் தலைவர், அப்பு, வி.எம். பாலாஜி மற்றும் புதிய நீதிக் கட்சியின் பொறுப்பாளர்கள், பட்டு பாபு, பி.சரவணன், பிரம்மாஸ் பள்ளி நிர்வாகத் தலைவர் செந்தில், மான்ஸ்டர் பிரவீன்குமார், ம.சசிகுமார், உமா மகேஸ்வரி, சத்தியமூர்த்தி, கன்னியப்பன், இளஞ்செழியன், சரத்குமார், மோகன், அன்பு, வினோத்குமார், நந்தகுமார், செல்வம், சீனிவாசன், கல்பனா, நித்தியா மற்றும் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு இந்த அன்னதான விழாவை சிறப்பித்தனர். தொடர்ச்சியாக பசியை ஆற்றும் புண்ணியவான் எனவும் தொடர் அன்னதானம் வழங்கி மக்கள் மனதில் இடம் பிடித்தவர் ஆகவும், கைத்தறி பூங்கா மற்றும் பல்வேறு அமைப்புகளை உருவாக முயற்சி தந்தவர், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரும்பாடு பட்டு பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வரும் சமூக ஆர்வலரும், இதுபோன்று அன்னதானமும் வழங்கி மக்களுக்கு பல்வேறு நல திட்டங்களை உதவி செய்து வருகிறார் என பொதுமக்கள் இவருக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இந்த அன்னதான விழாவில் சுமார் 3 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கியது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வாகன ஓட்டிகள் இவரை பாராட்டி வாழ்த்தி வருகின்றனர்.

## பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

சென்னை, ஜூலை.19-

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் இரண்டாம் கட்டம் (தொகுதி 1) 14.07.2025 முதல் 16.07.2025 வரை 03 நாட்கள் தமிழ்நாடு காவல் பயிற்சி தலைமையகத்தின் கீழ் நடத்தப்பட்டது. இப்பயிற்சியானது. 15 பணியிடை பயிற்சி மையங்கள் (ISTC) மூலம் சென்னை, தாம்பரம். ஆவடி ஆகிய காவல் ஆணையரகத்தை சேர்ந்த 93 பெண் காவலர் முதல் பெண் சிறப்பு உதவி ஆய்வாரள்கள் வரையிளானவர்களுக்கு காவல் பயிற்சி தலைமையகத்தில் செயல்படும் ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி மையத்திலும் மற்றும் தமிழகத்தில் திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், சேலம், கோயம்பத்துர, திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய 08 காவல் பயிற்சிப் பள்ளிகளில் 691 பெண் காவலர்களுக்கும் என மொத்தம் 784 பெண் காவலர்களுக்கு, இப்பயிற்சியானது அளிக்கப்பட்டது. இந்தப் பாடநெறி தமிழ் நாடு காவல்துறையை சேர்ந்த அனைத்து பெண் காவலர்களையும் உள்ளடக்கி தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்டங்கள் மற்றும் அவர்க ளுக்கு எதிராக இழைக்க ப்படும் குற்றங்கள், அவர்களைக் கையாளும் முறைகள், புலனாய்வு நுட்பங்கள், வழக்கு ஆவணங்களை ஆவணப்படுத்துதல், POCSO மற்றும் சிறார் வழக்குகளில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை பற்றிய தெளிவு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, விழிப்புணர்வு, மறுவாழ்வு மற்றும் அரசு உதவி குறித்த பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டது. மேலும் இப்பயிற்சியின் போது உடலையும், மனதையும் வலுப்படுத்தும் நோக்கில்



யோகா பயிற்சிலும் அவர்கள் சிறப்பாக பங்கேற்று பயனந்துள்ளனர். பயிற்சியின் இறுதி நாளன்று, பயிற்சி குறித்த விளக்க அமர்வு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவும் காவல் பயிற்சி தலைமையக காவல் துறை இயக்குநர் திரு.சந்தீப் ராய் ரத்தூர், இ.கா.ப அவர்கள் தலைமையில் சீறப்பாக நடைபெற்றது. மேலும், இவ்விழாவில் காவல் துறை இயக்குநர் பயிற்சி அவர்கள் காவல் பயிற்சி தலைமையகத்திற்கான சிற்றேடு (Brochure). வருடாந்திர பாட நாட்காட்டி (Course Calendar). பெண்கள் மற்றம் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்த பயிற்சி கையேடு மற்றும் காவல் பயிற்சி கையேடு (Police Training Manual) ஆகிய புத்தகங்களை வெளியிட்டு பயிற்சியாளர்களை ஊக்குவித்து சிறப்புரையாற்றினார்கள்.

இப்பயிற்சித் தொகுப்பில் உள்ள அனைவரும் கூட்டாக மதிப்புமிக்க நன்மைகளைப் பெற்றுள்ளனர் என்றும் மகிழ்ச்சியான மனப்பான்மையுடன் தங்கள் கடமைகளைச் செய்வதன் மூலம் தமிழ்நாடு காவல்துறைக்கு பெருமை சேர்ப்பார்கள் என்றும் காவல் பயிற்சி தலைமையக காவல் துறை இயக்குநர் அவர்கள். இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார்கள்.



## முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்தநாள் விழா

மானாமதுரை, ஜூலை.19-

மானாமதுரை தமிழகத்தின் முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15ம் தேதி கல்வி வளர்ச்சி தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.இந்த நாளில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடம் கல்வி தொடர்பான பேச்சு, கட்டுரை, கவிதை, ஒவியம் போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. அவ்வகையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கீழநெட்டூர் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாளை முன்னிட்டு மாணவ மாணவிகள் நடனமும் பாட்டும் நடைபெற்றது பேச்சுப் போட்டி கவிதைப் போட்டியில் பங்கு பெற்ற மாணவர்களுக்றகு பரிசுகள் வழங்கப்படது...

இந்நிகழ்வில்ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழநெட்டூர் மு மல்லிகா (த.ஆ.பொ) ம.புகழேந்தி பட்டதாரி ஆசிரியர் ப.நரேந்திரன் பட்டதாரி ஆசிரியர் ச.ஜோதிமஞ்சு இடைநிலை ஆசிரியர்

சு.இராஜேஸ்வரி இடைநிலை ஆசிரியர் மாணவ மாணவிகள் ஆகிய கலந்து கொண்டனர்



## அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ அகிராண்டேஸ்வரி சமேத ஜம்பு கேஸ்வரர் ஆலயத்தில் 27 ம் ஆண்டு ஆடி திருவிழா

முடிச்சூர், ஜூலை.19-

செங்கல்பட்டு மாவட்டம் முடிச்சூர் மதனபுரம் புற்றுகோவில் அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ அகிராண்டேஸ்வரி சமேத ஜம்பு கேஸ்வரர் ஆலயத்தில் 27 ம் ஆண்டு ஆடி திருவிழா ஆடிமாதம் 2 ம் தேதி முதல் ஆடி மாதம் 4ம் தேதி வரை (18.07.25) முதல், (20.07.25) ஆகிய தேதிகளில் அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளி அம்மனுக்கு ஆடி திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது .அதனை முன்னிட்டு இன்று பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பால் குடம் ஊர்வலம் ரங்கா நகரில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் இருந்து புறபட்டு முக்கிய வீதிகளில் வழியாக பம்பை உடுக்கயுடன் ஊர்வலமாக வந்து அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளி அம்மன் ஆலயம் வந்தடைந்து அம்மனுக்கு பாலபிஷேகம் செய்யபட்டது. இந்த விழாவிற்க்கன ஏற்பாடுகளை முடிச்சூர் ஊராட்சி மன்ற துணை தலைவர் எ.வினாயக மூர்த்தி பொன்மணி, கே.ஏழுமலை மல்லிகா,பி.ஆனந்தன்,முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் பொற்செல்வி ஆறுமுகம், பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எ.குமரன் ஆகியோர் செய்திருந்தனர்.



## ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம்

### சக்தி அம்மா ஆளுநருக்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌரவித்து பிரசாதம் வழங்கினார்

வேலூர், ஜூலை.19-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அடுத்த திருமலைக்கோடியில் உலகளவில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தனது குடும்பத்தினருடன் தங்க கோயிலில் ஸ்ரீ லட்சுமி சுவாமி தரிசனம் செய்தனர். இதனைத் தொடர்ந்து தமிழக ஆளுநரின் குடும்பம் சக்தி அம்மாவை நேரில் சந்தித்து உரையாடினர். சக்தி அம்மா ஆளுநருக்கு பிரசாதம் வழங்கி, பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.




## வேலூர் அன்னை மிரா பொறியியல் கல்லூரியில் காமராஜர் பிறந்த நாள் விழா மற்றும் கல்லூரி 14ம் ஆண்டு விழா

வேலூர், ஜூலை.19-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த அரப்பாக்கம், அன்னை மிரா பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் 123வது பிறந்தநாள் விழா, கல்வி வளர்ச்சி தினமாகக் கொண்டாடப்பட்டது. இந்தநிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிறுவனத் தலைவர் எஸ்.ராமதாஸ், செயலாளர், பொருளாளர் ஜி.தாமோதரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதில் காமராஜரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவிமரியாதை செலுத்தினர். கடந்த 2012ம் ஆண்டு காமராஜர் பிறந்த நாளில் தான் இந்த கல்லூரி துவங்கப்பட்டு 13 ஆண்டுகள் நிறைவடைந்து, 14ம் ஆண்டு துவங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இநிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் டி.கே. கோபிநாதன், துணை முதல்வர் டி. சரவணன், நிர்வாக அலுவலர் சாண்டில்யன், இயக்குநர்கள் பிரசாந்த், கிஷோர், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலக வளாகத்தில் கரமராஜர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.




■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட 55 வது வார்டு மேலவை பிரதிநிதி M.ராஜா அவர்களின் புதிய நான்கு சக்கர வாகனத்தை தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார். அதனை தொடர்ந்து தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அந்த புதிய நான்கு சக்கர வாகனத்தில் திமுக கட்சி கொடியை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார். அப்போது மாநகராட்சி மேயர் வசந்திகுமார் கமலகண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பார்வையாளர் பருதி இளம் சுருதி, பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர் புகழேந்தி, வட்ட செயலாளர் ஐசக் உள்பட பலர் உடனிருந்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161